


## கூவத்தூர் ஆட்டத்தையே பொறுக்காத தமிழ்நாடு – பா.ஜ.க.வோடு நீங்கள் போடும் கொட்டத்தை ஏற்குமா?

# பழனிசாமியின் வாய்க்கொழுப்புக்கு இந்தத் தேர்தல் முடிவு கட்டும்!

## மறைமலைநகர் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**மறைமலைநகர், ஏப்.11**

**திராவிட மாடல் அரசின் திட்டங்கள் இருக்கும் வரை இந்த ஸ்டாலின்தான் தமிழ்நாட்டை ஆள்வான் என்றும், கூவத்தூர் ஆட்டத்தையே பொறுக்காத தமிழ்நாடு, பா.ஜ.க.வோடு நீங்கள் போடும் ஆட்டத்தையா பொறுத்துக் கொள்ளும்? உங்கள் கொட்டத்திற்கும் வாய்க்கொழுப்புக்கும் இந்தத் தேர்தல் முடிவுகட்டும் எனவும், மறைமலைநகர் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (09.04.2026) மறைமலைநகரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

தமிழ்நாட்டின் தலைமகன் – நம்மையெல்லாம் ஆளாக்கிய ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த ஒருங்கிணைந்த காஞ்சி மண்ணிற்கு, வாக்கு கேட்டு, மறைமலைநகருக்கு நான் வந்திருக்கிறேன்.

நம்முடைய அண்ணா உருவாக்கிய தமிழ்நாட்டைக் காக்க, உங்கள் ஆதரவைக் கேட்க வந்திருக்கிறேன்.

### தொழிற்சாலைகளின் கோட்டையில் வாக்குக் கேட்கிறேன்!

காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில், எந்தப் பக்கம் திரும்பினாலும் தொழிற்சாலைகள் – எங்கு பார்த்தாலும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள். இந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் கொண்டு வந்தது யார்? தி.மு.க. அத்தகைய, தி.மு.க. உருவாக்கிய "தொழிற்சாலைகளின் கோட்டைக்கு", வாக்கு கேட்க வந்திருக்கிறேன்.

தொழிற்சாலைகள் மட்டுமா... வளமான வயல்கள்; நிறைவான நீராதாரம் என இருக்கும் ஒருங்கிணைந்த காஞ்சிக்கு ஆதரவு கேட்க வந்திருக்கிறேன்.

அடுத்த கட்ட வளர்ச்சிக்கு காஞ்சிபுரமும், செங்கல்பட்டும் ரெடியா? திராவிட மாடல் 2.0-க்கு ரெடியா?

இன்றைக்கு, பாதி தமிழ்நாட்டை நான் சுற்றி வந்துவிட்டு, மூன்றாம் கட்ட பரப்புரைப் பயணத்தை நிறைவு செய்து, நாளை, நான்காம் கட்ட பரப்புரைப் பயணத்தைத் தொடங்கப் போகிறேன். நம்முடைய ஒவ்வொரு நொடியையும், தமிழ்நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கான பிரச்சாரத்தைச் செய்தாக வேண்டும்!

### கடுமையான பிரச்சாரம்! அனைவருக்கும் பெரிய 'சல்யூட்'!

தமிழ்நாடு முழுவதும் திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளும் – மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தொண்டர்களும், செயல்வீரர்களும் – தமிழ்நாட்டைக் காக்க – டெல்லியின் ஆணவத்துக்கு அடிபணிய கூடாது என்று, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், கடுமையான பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் அனைவருக்கும், கழகத்தின் தலைவராக – இந்தக் கூட்டணியின் தலைவராக பெரிய "சல்யூட்".



திராவிட மாடல் ஆட்சியில் தலைநிமிர்ந்துள்ள தமிழ்நாடு, திராவிட மாடல் 2.0 ஆட்சியில், புது உயரங்களை அடைய நம்முடைய வெல்லும் வேட்பாளர்களை உங்களுக்கு நான் அறிமுகப்படுத்தப் போகிறேன்.

### நமது வெற்றி வேட்பாளர்கள்!

முதலில், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள். ஆலந்தூர் தொகுதியில் நான்காவது முறையாக போட்டியிடுகிறார். 25 ஆண்டுகளாக மாவட்டக் கழகத்தின் செயலாளராக இருக்கிறார். இதுவே அவரது மக்கள் செல்வாக்குக்கும், உழைப்புக்கும் எடுத்துக்காட்டு! நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரிய அளவில் பாராட்டப்படும் வகையில் – சாதனை செய்யும் வகையில் வளர்வதற்கு துணை நின்ற அமைச்சர்! அமைச்சர் அன்பரசன் அவர்களுக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அருமைச் சகோதரர் செல்வப்பெருந்தகை அவர்கள். அன்னை சோனியா காந்தி அவர்கள் மற்றும் அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களின் ஆதரவைப் பெற்ற வேட்பாளர். தமிழ்நாடு சட்டமன்றத்தில், காங்கிரஸ் கட்சியின் சார்பில், தன்னுடைய வாதங்களை மிகச் சிறப்பாக உறுதியோடு முன்வைப்பவர். இவர் பேச எழுந்தாலே, அ.தி.மு.க. பயந்து கத்துவார்கள். தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வலிமையாகவும், தோழமை உணர்வோடும் இருப்பதற்கு முக்கியக் காரணம், நம்முடைய சகோதரர் செல்வப்பெருந்தகை. இதை அவர் பல நேரங்களில் தன்னுடைய செயல்களால் உணர்த்தியிருக்கிறார். எனவே நீங்கள் எல்லாம் அவருக்கு கை சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.



**தமிழ்நாட்டில் என்ன பாதிப்பு ஏற்பட்டாலும் மக்களுடன் இருப்பவன் இந்த**
**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!**

**கொரோனா மட்டுமல்ல, தமிழ்நாட்டில் சென்னை உட்பட எந்த மாவட்டத்தில் மழை, வெள்ளம் பாதிப்பு ஏற்பட்டாலும், பயிர்ச்சேதம் ஏற்பட்டாலும், நிலச்சரிவு நடந்தாலும் நேரில் சென்று உடனுக்குடன் பார்த்திருக்கிறேன். வாழ்க்கை முழுவதும் மக்களுடன் களத்திலேயே இருப்பவன்தான், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!**

### உதயசூரியன் உதிக்கட்டும்!

அடுத்து, உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் க. சுந்தர் அவர்கள். 1989, 1996, 2006, 2016, 2021 என தொடர்ந்து உத்திரமேரூர் தொகுதி மக்களின் நம்பிக்கையையும் – நன்மதிப்பையும் பெற்ற செயல்வீரர், வெற்றிவீரர்! காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர். மக்களோடு மக்களாக இருப்பவர் என்பதற்கு, அவரது தொடர் வெற்றிகளே எடுத்துக்காட்டு! அவரை மீண்டும் தேர்ந்தெடுக்க உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் ஆதரவினை வழங்கிட வேண்டும். அடுத்து, செய்யூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த சிந்தனைச்செல்வன் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்களால் மேஜர் ஜெனரல் என்று அழைக்கப்பட்ட எழுச்சித் தலைவர் சகோதரர் தொல். திருமாவளவன் அவர்களின் அன்பைப் பெற்ற வேட்பாளர். கடந்த முறை காட்டுமன்னார்குடி தொகுதி மக்களின் குரலாக சட்டமன்றத்தில் ஓங்கி ஒலித்தவர். சிந்தனைச்செ ல்வன் அவர்களைப் பொறுத்தவரையில், அவரின் சிந்தனைகள் மட்டுமல்ல; வளமான அவரது குரலும் – அதில் ஒலிக்கும் வலிமையான சொற்களும், அவரது பேச்சை உற்று கவனிக்க வைக்கும். அவருக்கு பானை சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளித்து அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் எம்.கே.டி. கார்த்திக் தண்டபாணி அவர்கள். இளைஞரணியில் தொடங்கி, நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர்மன்றத் தலைவராக இருந்து, மக்களுக்குப் பணியாற்றும் இவர், நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளராக கழகப் பணியும் செய்து கொண்டிருக்கிறார். இந்தப் பகுதியில் விளையாட்டுத் திடல், புது வகுப்பறைகள், பூங்காக்கள், சாலைகளில் கேமரா பொருத்தியது என்று ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

### பாரம்பரிய திராவிட இயக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர்!

அடுத்து, மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் அமுலு பொன்மலர் அவர்கள். 15 ஆண்டுகளாக தொழுப்பேடு பகுதியில் ஒன்றியக் கவுன்சிலராக பணியாற்றி வந்தவர். பாரம்பரியமாக திராவிட இயக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை வழங்கிட வேண்டும்.

அடுத்து, தாம்பரம் சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் டாக்டர் ஆர்.எஸ். கிருத்திகா தேவி அவர்கள். கழக மருத்துவர் அணி மாநில துணைச் செயலாளர். மக்கள் மருத்துவராக அறியப்பட்டவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட கழகத் தொண்டர் சுப்பையா அவர்களின் மகள். மருத்துவர் கிருத்திகா தேவி அவர்களுக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை வழங்கிட வேண்டும்.

அடுத்து, திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த பன்னீர்தாஸ் அவர்கள். அருமைச் சகோதரர் எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவன் அவர்களின் அன்பைப் பெற்றவர். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில அமைப்புச் செயலாளர். சென்னை மாநகராட்சியின் வார்டு உறுப்பினராக செயல்பட்டவர். அவருக்கு நீங்கள் எல்லாம் பானை சின்னத்தில் உங்கள் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் நமது வெற்றி வேட்பாளர் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த அனகை முருகேசன் அவர்கள். என்னுடைய ஆருயிர் நண்பர் நினைவில் வாழும் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் வலது கரமாக செயல்பட்டு, இன்றைக்கு, சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களால் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார். செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். அவருக்கு நீங்கள் எல்லாம் முரசு சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் கணபதி அவர்கள். இரண்டு முறை காரம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவராகவும், ஒருமுறை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் இருந்து, மக்களுக்குப் பணியாற்றிய அவருக்கு, கடந்த முறை சட்டமன்ற வாய்ப்பு கொடுக்கப்பட்டு, நெற்குன்றம் அடுக்குமாடிக் குடியிருப்புகள், நொளம்பூர் கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் உள்ளிட்டவற்றை செயல்படுத்தியிருக்கிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### 2 மாவட்டங்களைச் சேர்ந்த 11 வேட்பாளர்களின் வெற்றி உறுதி!

அடுத்து, காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் நித்யா சுகுமார் அவர்கள். கழகத்தில் தலைமைச் செயற்குழு

தொடர்ச்சி 5–ஆம் பக்கம்